மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# புதுக்கவிதை வளர்ச்சியில் மணிக்கொடியின் பங்கு

கா. சேவுகமூர்த்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தில் அச்சியந்திரத்தின் வருகையால் தமிழர்களின் வாழ்க்கையில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது, தமிழரின் நாகரிகத்திலும், பண்பாட்டிலும் தமிழ் மணத்தோடு ஆங்கில மணமும் கலந்தது, இதனால் தமிழரின் கலாச்சாரத்தில் மட்டுமல்லாது தமிழ் இலக்கியப் பரப்பிலும் மாற்றம் ஏற்பட்டது, தமிழ் இலக்கியங்களை மட்டுமே கற்றவர்கள் வேற்று மொழி இலக்கியங்களையும் கற்றுச் சுவைத்தனர். இலக்கியங்கள் எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆவல் தமிழ்க் கவிஞர்களிடையே தோன்றியது,

பாரதியார் மேலைநாட்டுக் கவிஞர்களாகிய வால்ட் விட்மன், ஷெல்லி கவிதைகளைப் படித்துச் சுவைத்து தன் கவிதைகளைப் புதிய வடிவத்தில் எழுத எண்ணம் கொண்டார்,

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொல்புதிது சோதிமிக்க நவகவிதை"

என்ற தெளிந்த சிந்தனையில் தம் கவிதைகளைப் படைத்தார் கவி சுப்பிரமணிய பாரதி. பண்டைய நாளில் இருந்துவந்த தமிழ்க் கவிதைகளில் இருந்து அவை மாறுபட்ட தன்மைகளைப் பெற்று விளங்கின. தமிழ்க் கவிதைகளில் புதிய வடிவம், புதிய பாடுபொருள் தோற்றம் பெற்ற பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நா.பிச்சமூர்த்தி, கு.ப.இராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர் எழுதினர். பாரதி வித்திட்ட புதுவடிவத்தைப் புதுக்கவிதை எனும் செடியாக வளர்த்து செழிக்கச் செய்தனர். அந்நால்வரின் எண்ணங்களுக்கு வடிகாலாய் இருந்தது மணிக்கொடி இதழ். இவ்விதழின் தோற்றத்தினையும் அது புதுக்கவிதை வளர்ச்சிக்கு ஆற்றிய பணியையும் இக்கட்டுதை ஆராய்கிறது.

**மணிக்கொடி தோற்றம்**

1930 – ஆம் ஆண்டு செப்டம்பர் பதினோரம் தேதி கு,சீனிவாசன், வ,இராமசுவாமி, தி.ச.சொக்கலிங்கம் ஆகிய மூவரின் முயற்சியில் மணிக்கொடி இதழ் தோற்றம் பெற்றது, மணிக்கொடி ஒரு முயற்சி முடிவுகாலம் காட்டும் மணிக்கொடி ஒரு பிறவி. இதன் வாழ்வும் வளர்ச்சியும் எங்கள் இலட்சியத்தின்! உங்கள் அன்பிலே, இறைவன் அருளிலே என்ற

அறிமுகத்துடன் தோற்றம் பெற்றது, மணிக்கொடி இதழ் தொடங்கியபோது அரசியல் சமூகச் செய்திகளை வெளியிடும் பத்திரிக்கையாகவே இருந்தது. பின்னர் அந்நிலையிலிருந்து வேறுபட்டு இலக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

பாரதியையும் பாரதிதாசனையும் தமிழ் உலகிற்கு பரவலாக அறிமுகப்படுத்தியது மணிக்கொடி. தமிழக்கும் அமுதென்று பெயர் என்ற பாரதிதாசனின் பாடலை வெளியிட்டதுடன் தொடர்ந்து அவருடைய பாடல்களை வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது.

“மணிக்கொடி புதிய இலக்கியத்திற்கு வித்திடும் பெரிய இலட்சியத்தோடு தோன்றிய அது மரபுவழிப்பட்ட இலக்கியம், புதிய இலக்கியம் என் பிரித்துப் பேசவில்லை, இலக்கியத்திற்கு விளக்கம் கொடுக்கவில்லை. இலக்கணம் வகுக்கவில்லை. அதற்குப் பதில் புதிய துறைகளில் இலக்கியத்தரமான எழுத்துக்கள வெளியிட்டது. இலக்கியத்தரமுள்ள கட்டுரைகள், நடைச்சித்திரங்கள், கவிதைகள் ஆகியவற்றை வெளியிட்டது. தொடக்க காலத்தில் அதில் சிறுகதைகள் மணிக்கொடியைத் தேடி வந்தன”(1)

பாரததிதாசனை மட்டுமல்லாது பாரதியையும் மகாகவியாக உலகிற்கு அடையாளப்படுத்தியது மணிக்கொடி இதழ்தான். கம்பனுக்குப் பிறகு தமிழில் மகாகவியே பிறக்கவில்லை என் கருதிக்கொண்டிருந்தவர்களின் கண்களைத் திருமகன் மகாகவி பாரதி என்பதை அவருடைய கவிதைகளைக் கொண்டு உணர வைத்தது. இது புதிய இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த பெரிய தொண்டாகும். பாரதியைத் தொடர்ந்து புதிய தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்த பாரதிதாசனை நாட்டினருக்கு அறிமுகப்படுத்தியது மணிக்கொடியின் இரண்டாவது சாதனை.

மணிக்கொடி இதழில் ந.பிச்சமூர்த்தி பிஷு என்ற பெயரில் கட்டுரைகளையும் கதைகளையும் கதைகளையும் எழுதலானார். இவரோடு இணைந்து கு.பா.இராஜகோபாலன் கட்டுரைகளையும், புதுமைப்பித்தன் சிறுகதைகளையும் எழுதி வந்தனர். தொடர்ந்து கவிதைகளையும் எழுதினர். ந.பிச்சமூர்த்தி, கு.பா.இராஜகோபாலன். புதுமைப்பித்தன் ஆகியோருக்கு எழுதுவதற்கான களமும் அவர்களது எழுத்துக்களையெல்லாம் வெளியிடுவதற்கான களத்தையும் அமைத்துக் கொடுத்தது மணிக்கொடி. இதனால் தொடர்ந்து புதுக்கவிதையும் புதுக்கவிஞர்களும் உருவாகினர்.

1936 மார்ச்சுக்குப் பின் பெரும்பான்மைச் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மணிக்கொடி சிந்தனையை அழுத்தாத ஓரிரண்டு பக்கங்களாவது இருந்தால் நல்லது என்ற எண்ணத்துடன் மைதானம் என்ற பகுதியைத் தொடங்கியது. ‘ரகளைக் கவி’ என்ற பொருள் முதல் பந்தயமாக வைக்கப்பட்டது. அதில் பலர் கலந்துகொண்டு கவிதைகளை எழுதினர்.

தமிழில் காளமேகம், இரட்டைப் புலவர்கள் கவிதைகளைப் போல கிண்டல், நையாண்டிப் படைப்பாக இல்லாமல் இலக்கியத்தரம் பெற்ற கவிகளைப் போலி செய்து அதே பாணியில் நையாண்டியாக எழுதப்படுவதுதான் ரகளைக் கவி. ஆங்கிலத்தில் பாரடி என்னும் ரகத்தைச் சேர்ந்தது.

“.........................................................................

ஏரியில் நீந்தலாம் காரிலும் படுக்கலாம்

தன் நகரின் முனிசிபல் பிரதிநிதியாகலாம்
கொண்டாடும் காப்பியை ஓர்வேளை
தேடாமல் சும்மாவிருக்கின்ற திறம்பரிது" (மணிக்–ப–205)

இக்கவிதை விசாகபட்டினத்திலிருந்து என். சுப்பிரமணியன் என்பவர் எழுதி அனுப்பியது.

"பெரிது பெரிது யானை பெரிது
யானையோ காட்டில் வாழ்வது
அரிது அரிது சர்பட்டம் பெறுதல்
சர்பட்டம் பெற்ற காலையும்
சட்டசபையில் நுழைவதரிது"

இக்கவிதை குலவணிகபுரம் குபா,வெங்கடாசலம் என்பர் எழுதியது. மணிக்கொடி இதழ் சிறுகதை கொடுத்த முக்கியத்துவத்தைப் புதுக்கவிதைக்குக் கொடுக்கவில்லை என்றாலும் புதுக்கவிதையின் தோற்றத்திதற்கும் வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாய் அமைந்தது. தொடக்ககாலத்தில் மணிக்கொடியில் எழுதிக் கொண்டிருந்த பிச்சமூர்த்தி, கு.ப.ரா., புதுமைப்பித்தன் ஆகியோருடன் சி.சு.செல்லப்பாவும் வந்த சேர்ந்து கவிதைகளையும் கதைகளையும் மணிக்கொடியில் எழுதத்தொடங்கினர்.

பலவான்குடி பழ.இராமசாமி என்பர் பாரதியின் 'இரும்பை காய்ச்சி' என்ற பாடலின் பாணியில் கவிதை எழுதினார்.

"எறும்பைக் கையால் நசுக்கிடுவோமே
ஏணிப் படிதனில் ஏறிடுவோமே
கரும்பைக் கடித்துத் தின்றிவோமே
காகிதங்களைக் கிழித்திடுவோமே" (மணிக்–ப–205)

மணிக்கொடி இதழில் நையாண்டியாக வெளிவந்த கவிதைகள் இலக்கியத்தரம் அற்றவை என்றாலும், புதிய வடிவத்ததில் எழுதப்பட்டவை. பழைய வடிவங்களுக்கு முற்றிலும் வேறுபட்டவை. இக்கவிதைகளைப் படித்துச் சுவைத்த பலரும் இதுபோன்ற வடிவங்களில் தம் எண்ணங்களை வெளியிடலாம் என்ற எண்ணத்தை மணிக்கொடி இதழ் தோற்றுவித்தது.

பாரதி தோற்றுவித்த வசன கவிதை முயற்சி பின்னர் 1930களின் பிற்பகுதியில்தான் துளிர்விடத் தொடங்கியது. பாரதிக்குப் பிறகு புதுக்கவிதை முயற்சியில் ஆர்வத்துடன் முதன்முதலில் ஈடுபட்ட ந. பிச்சமூர்த்தி, பிசஷ் என்ற பெயரில் புதுக்கவிதை எழுதலானார். இவர் எழுதிய முதல் கவிதை எது என்பதை அவரே ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"நான் புதுக்கவிதை எழுத ஆரம்பித்தது 1934 மணிக்கொடி என்பதில் ஐயமில்லை. புதுக்கவிதையின் தோற்றத்திற்குரிய காலத்தை 1930–45 எனக் கூறலாம். இக்காலக்கட்டத்தைப் புதுக்கவிதையின் முதல்நிலைக் கட்டம் என் வல்லிக்கண்ணன் கூறுவார். மணிக்கொடி குழுவினர் என்று வழங்கப்பெறும் சிலர் பாரதியாரின் வசனப்பகுதிகள் சிலவற்றை அடிப்படையாகக்கொண்டும், மேலைநாட்டு கவிஞர்களாகிய

எஸ்ரா பவண்டு. டி.எஸ்.பலியட்டு. வால்ட்விட் எமன் போன்றோர் எழுதிய யாப்பிலாக் கவிதைகளைப் பரிசோதனைகளாக அவ்வப்போது எழுதி வெளியிட்டவை ’வசனக் கவிதைகள்’ என்று வழங்கப்பெற்றன.

“கவிதையை ஓர் இலக்கிய இயக்கமாகக் கருதும் அளவிற்கு வசன கவிதைகளை அதிகமாகவும், முனைப்பான கொள்கை வெளியீட்டுடன் எழுதினார். இவர்கள் தமிழ் இலக்கிய உணர்வினின்றும் அதிகமாகப் பிரிந்து நின்றனர் என்று கூறுவதற்கில்லை. வசன கவிதை என்னும் வடிவத்தில் தம்மைப் பறிகொடுத்து நின்றனரேயன்றி புதிய பொருளிலோ திட்ட அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை. பாரதியின் வசன கவிதையிலும் மேலை நாட்டுக் கவிதையின் தாக்கத்தாலும் ந.பிச்சமூர்த்தி, கு.பா.இராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் போன்றோர் வசன கவிதையில் மனதைப் பறிகொடுத்து அதுபோன்றே எழுதினர். அவர்கடைய கவிகைள் மணிக்கொடியில் வெளிவந்தன.

வசன கவிதை எழுதுகின்றபோதே மரபுவழிக் கவிதையைப் போல் தோற்றம் காட்டுகின்ற கவிதைகளை எழுதுவதிலும் ந.பிச்சமூர்த்தி நாட்டம் கொண்டிருந்தார். இவர்தம் ’அக்கா குருவி’ இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். ஆயினும் இக்கவிதை வசன காவியம் என்ற தலைப்பில் மணிக்கொடி இதழில் வெளியாயிற்று. இதனைத் தொடர்ந்து கொம்பும் கிணறும், மார்கழிப் பெருமை, பொற்றாமரை போன்ற கவிதைகள் 1939ல் மணிக்கொடி இதழில் வெளிவந்தன. இவரைத் தொடர்ந்து கு.பா.இராஜகோபாலன் சில கவிதைகளை எழுதி மணிக்கொடி இதழில் வெளியிட்டார். கிராமியக் காதலர்கள் பற்றிய கிராமியப் பாங்கான முறையில் கவிதை எழுதுவதில் அதிக உற்சாகம் காட்டினார். அதில் வெற்றியும் கண்டார்.

புதுக்கவிதையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாய் இருந்த மணிக்கொடி இதழில் புதுக்கவிதையின் உருவப் பரிசோதனை மரபு, யாப்பற்ற சந்த நடை, சமூக விமர்சனம், மக்களின் நடைமுறைப் பிரச்சினை போன்றவற்றை மையமாகக்கொண்டு புதுக்கவிதைகளை எழுத முயன்றனர். புதுக்கவிதை வளர்ச்சியில் மணிக்கொடி முதல்படி என்றால் அது மிகையாகாது.

**முடிவுகள்**

1. பாரதியை மகாகவி என்று உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை மணிக்கொடி இதழையே சாரும்.
2. பாரதிதாசனையும் அவரது கவிதைகளையும் மக்கள் மத்தியில்கொண்டு சென்ற பெருமை மணிக்கொடியைச் சேரும்.
3. புதுக்கவிதையின் பிதாமகன் என்று கருதப்படும் ந.பிச்சமூர்த்தி கு.ப.இராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், சி.சு.செல்லப்பா ஆகிய கவிஞர்களை அறிமுகப்படுத்திய பெருமை மணிக்கொடிக்கு உண்டு.

**துணை நூற்கள்**

1. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்.
2. ந.சுப்புரெட்டியார், புதுக்கவிதை நோக்கும் போக்கும்.
3. பாக்கிய மேரி, வகைமை நோக்கில் தமிழிலக்கிய வரலாறு.